# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 1713 - 2011 ජූලි මස 01 වැනි සිකුරාදා - 2011.07.01

*1713 ஆம் இலக்கம் – 2011 ஆம் ஆண்டு யூலை மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி II – சட்ட சம்பந்தமானது

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாக கோவை செய்து வைப்பதற்காகத் தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன.)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| சட்டங்கள் | - | பிசுக்கால் மால்சல்மாரின் நியமனங்கள் | - |
| சட்டமூலங்கள் | - | பிசுக்கால் விற்பனை பற்றிய அறிவித்தல்கள் | - |
| மேன்முறையீட்டு நீதிமன்றச் சட்ட அறிவித்தல்கள் | - | மரணசாதன வழக்குகளின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | சட்டக் கல்விச் சபையின் அறிவித்தல்கள் | - |
| உயர் நீதிமன்ற குற்றவிசாரணை பற்றிய அறிவித்தல்கள் | - | நொத்தாரிசுமார் பட்டியல் | - |
| மாவட்ட நீதிமன்ற, நீதிவான் நீதிமன்ற அறிவித்தல்கள் | - | நானாவித அறிவித்தல்கள் | 54 |
| கடனிறுக்க முடியாமைக்கான வழங்குகளின் அறிவித்தல்கள் | - | பிசுக்கால் மார்சல்மாரின் நியமனங்கள் | - |


### வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்**. இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்**, அதாவது 2011, யூலை மாதம் 08 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2011, யூன் மாதம் 24 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.

# நானாவித அறிவித்தல்கள்

## செய்யது சேஹு கோயா தங்கல் மௌலானா மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

மாண்புமிகு மொஹமட் பைசால் காசீம் ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் 'செய்யது சேஹு கோயா தங்கல் மௌலானா மன்றம் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த செய்யது சேஹு கோயா தங்கல் மௌலான மன்றம் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. ஸ்ரீ லங்கா வாழும் சகல இன மக்களிடையே சாந்தியும், சமாதானமும், ஒற்றுமையும் நிகழ்வதற்கு ஏதுவாக அமைந்துள்ளது ;
2. பல தக்யா பள்ளிகள், அரபிக் கல்லூரிகள் ஆண் பிள்ளைகளுக்கான அனாதை இல்லங்கள் அமைவதற்கு உதவியாகவுள்ளது ;
3. உண்மையான சுன்னத் ஜமாத் கொள்கைகளைப் பற்றிய விழிப்புணர்வை மக்களிடையே உணர்த்துவதற்கும் மற்றும் வேறு விடயங்களுக்காகவும் உறுதுணையாகவுள்ளது ;

பிறவும்.

பைசால் காசீம்,
பாராளுமன்ற உறுப்பினர்,
திகாமடுல்ல மாவட்டம்.

7-102

---

## த பேரண்ட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்

நாமல் ராஜபக்ஷ ஆகிய நான், இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தின் நிலையியற் கட்டளைகளின் 48 ஆம் இலக்க நிலையியற் கட்டளையின் கீழ் ''த பேரண்ட்ஸ் மன்றத்தைக் கூட்டிணைப்பதற்கானதொரு சட்டம்'' எனப்படும் சட்டமூலமொன்றைப் பாராளுமன்றத்தில் அறிமுகஞ் செய்ய எண்ணியுள்ளேன் என்பதை இத்தால் அறியத்தருகின்றேன்.

பின்வரும் பொதுக் குறிக்கோள்களைக்கொண்ட மேற்குறித்த மன்றத்தைக் கூட்டிணைப்பதே இச்சட்டமூலத்தின் நோக்கமாகும் :-

1. இலங்கையிலும், சிறுவர் மற்றும் மகளிர் அபிவிருத்தி, சமூக, பொருளாதார மற்றும் கலாச்சார விழுமியங்களை மேம் படுத்தல் ;
2. இலங்கை சிரேஷ்ட பிரஜைகளின் சகல அபிவிருத்தி நடவடிக்கைளையும் விருத்தி செய்ய நடவடிக்கை எடுத்தலும் பிறவும் ;

பிறவும்.

நாமல் ராஜபக்ஷ,
பாராளுமன்ற உறுப்பினர்,
ஹம்பாந்தோட்டை மாவட்டம்.

7-33

---

## கொழும்பில் சிவில் வழக்குகளை நடத்தி வரும் மேல் மாகாண உயர் நீதிமன்றத்தில்

HC (Civil) Case No. 26/2011/CO

2007 ஆம் ஆண்டின் 07 ஆம் இலக்கமிடப்பட்ட கம்பனிகள் சட்டத்தின் 270 ஆம் பிரிவு/அல்லது 272 ஆம் பிரிவின் கீழான விண்ணப்பம் விடயத்தில்,

பத்தரமுல்லை, ஜயந்திபுர, மத்திய வீதி, இல. 01 புளூலைன் சீ புட் (பிரைவேட்) லிமிட்டெட் விடயத்தில்,

மற்றும்

2007 ஆம் ஆண்டின் 07 ம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் 270 (b) மற்றும் 270 (f) பிரிவு விதிகளின் கீழ் புளூ லைன் சீ புட் (பிரைவேட்) லிமிட்டெட்டை கலைப்பதற்கான விண்ணப்பம் விடயத்தில்,

ஹசித சுமிந்த திசாநாயக்க இல. 01 மத்திய வீதி, ஜயந்திபுர, பத்தரமுல்லை.

............. மனுதாரர்

மனுதாரர் சார்பாக சட்டத்தரணி இந்துனில் நிஷாந்த பண்டார என்பவரால் 2011.05.06 ஆந் திகதி, கொழும்பில் சிவில் வழக்குகளை நடத்தி வரும் மேல்மாகாண உயர் நீதிமன்றத்தில் மேற்கண்ட கம்பனியை கலைப்பதற்கான மனு சமர்ப்பிக்கப்பட்டது. கூறப்பட்ட மனு நீதிமன்றத்தில் 2011, யூலை 07 ஆந் திகதி விசாரணைக்காக அழைக்கப்படுமென உத்தரவிடப்பட்டுள்ளது. கூறப்பட்ட மனு சம்பந்தமாக ஓர் கட்டளை விடுக்கப்படுவதற்கு ஆதரவாகவோ அல்லது எதிராகவோ தோற்ற விரும்பும் எவரும் தாமாகவோ அல்லது தமது சட்டத்தரணி மூலமாகவோ மனு விசாரிக்கப்படும் போது தோற்றலாம். குறிப்பிட்ட கட்டணத்தை செலுத்துவதன் மூலம் கீழே ஒப்பமிட்டுள்ள வரால் மனுவின் பிரதியை கோரும் எந்த கடனாளிக்கும் அல்லது கூறப்பட்ட கம்பனியின் பங்குதாரருக்கு மனுவின் கீழே கையொப்பமிட்டுள்ள வரால் பிரதி வழங்கப்படும் :-

இந்துனில் நிஷாந்த பண்டார,
சட்டத்தரணி,
25ஏ, பெல்மன்ட் வீதி,
கொழும்பு 12.
தொலைபேசி : 071-9977000/0714279731

**குறிப்பு.**- கூறப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படும் போது தோற்ற விரும்பும் எவரும் தாம் அவ்வாறு தோற்ற விரும்புவதாக எழுத்து மூலமாக இந்துநில் நிஷாந்த பண்டார சட்டத்தரணிக்கு நேரடியாக அல்லது தபால் மூலம் அறிவிக்க வேண்டும். அறிவித்தலில் நபரின் பெயர், விலாசம், நிறுவனமாயின் நிறுவனத்தின் பெயர் விலாசத்தை குறிப்பிடுவதுடன் குறித்த நபர் அல்லது அவரது சட்டத்தரணியால் (இருப்பின்) ஒப்பமிடப்பட்டு சமர்ப்பிக்கப்பட வேண்டும். அல்லது 2011.07.07 பி. ப. 4.00 மணிக்கு பிந்தாமல் மேற்கண்ட பெயர் கொண்டவரை அடையுமாறு தபாலில் அனுப்ப வேண்டும்.

இந்துனில் நிஷாந்த பண்டார,
சட்டத்தரணி.

7-108

**அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்குமுரிய புதிய விகிதங்கள்**
**2009 சனவரி 01 ஆந் திகதி தொடங்கி அமுலுக்கு வந்தது**
**"இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை"**
**(வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது.)**

1. பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் விளம்பரதாரர்களே பொறுப்பாளராவார்.

2. தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன் **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8** அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.

3. அலுவலக நேரம் மு. ப. 8.30 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 9.00 மணி முதல் பி. ப. 3.00 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படுதல் வேண்டும்.** தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின் பெயருக்கு எழுதப்பட்ட மணி ஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.

6. **நகலைக் கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் ரைப் அடித்தல்** பிழைகளையும் காலதாமதத்தையும் தவிர்க்க ஏதுவாகும். கையெழுத்துப் பிரதி எதுவும் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. வியாபார விளம்பரங்களும் பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

9. நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்பட வேண்டிய விளம்பரங்கள் 'சுப்றீம் கோட்' புறொக்ட்ரால் கையொப்பமிடப்பட்டு அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்பட மாட்டா.

10. அறிவித்தல்களுக்கும் விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதியிலிருந்து பின்வருமாறு :-

| | ரூபா | ச. |
|---|---|---|
| ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய | 137 | 00 |
| மேலதிகமான ஒவ்வொரு அங்குலமும் அல்லது அதன் பகுதிக்கும் | 137 | 00 |
| ஒரு பத்தி அல்லது வர்த்தமானியின் அரை பக்கம் | 1,300 | 00 |
| இரு பத்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம் | 2,300 | 00 |

ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல் வேண்டும்.

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி** வெளியிடப்படும். அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.

12. **ஒவ்வொரு மாதமும் முதற்கிழமை வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின் பிரகாரம் "அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு 8" அவர்கட்கு சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்துசேர வேண்டும்.**

13. **2011 சனவரி 01 ஆந் திகதியிலிருந்து மீளவாய்ந்த புதிய சந்தா விபரம் :-**

| இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி (வருடத்திற்கு) | முழு வருடத்திற்குமான கட்டணம் ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வதுதொகுதி | 2,080.00 | 3,120.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 1,300.00 | 3,120.00 |
| III வது தொகுதி | 780.00 | 3,120.00 |
| I வது பகுதி முழுவதும் (I, II, III தொகுதிகள் உட்பட) | 4,160.00 | 6,240.00 |
| II ஆவது பகுதி | 580.00 | 3,120.00 |
| III வது பகுதி | 405.00 | 3,120.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 890.00 | 2,400.00 |
| V வது பகுதி | 860.00 | 420.00 |
| VI வது பகுதி | 260.00 | 180.00 |
| அதிவிசேட வர்த்தமானி | 5,145.00 | 5,520.00 |

**முழு ஆண்டின் இறுதி வரைக்கும் பன்னிரண்டு மாதங்களுக்குக் குறையாத காலவெல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூபா ச. | தபால் செலவு ரூபா ச. |
|---|---|---|
| I வது பகுதி : | | |
| I வது தொகுதி | 40.00 | 60.00 |
| II வது தொகுதி (விளம்பரம், வெற்றிடங்கள், கேள்விகள், பரீட்சைகள் ஆகியன) | 25.00 | 60.00 |
| III வது தொகுதி | 15.00 | 60.00 |
| I வது பகுதி (I, II, III தொகுதிகள் உட்பட) | 80.00 | 120.00 |
| II வது பகுதி | 12.00 | 60.00 |
| III வது பகுதி | 12.00 | 60.00 |
| IV வது பகுதி (மாகாண சபைகள், உள்ளூராட்சி) | 23.00 | 60.00 |
| V வது பகுதி | 123.00 | 60.00 |
| VI வது பகுதி | 87.00 | 60.00 |

**இவைகளில் எவையேனும் பெற விரும்புவோர் சரியான பணத்தொகையை "அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5" என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப்பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

# வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக்கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளியிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், இல. 132, மாயா அவெனியு, கிருளப்பனை, கொழும்பு 5** என்ற விலாசத்துக்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**- இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால் ஏற்றுக்கொள்ளப்படும்** என்பதையும், **அரசாங்க பிரசுராலய அதிபரால் ஏற்றுக்கொள்ளப் படமாட்டாது** என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை - 2011**

| மாதம் | | வெளியீட்டு நாள் | | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|---|---|
| **யூலை** | .. | வெள்ளி | 01.07.2011 | .. | நண்பகல் 12 | வியாழன் | 17.06.2011 |
| | | வெள்ளி | 08.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 24.06.2011 |
| | | வெள்ளி | 15.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 01.07.2011 |
| | | வெள்ளி | 22.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 08.07.2011 |
| | | வெள்ளி | 29.07.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 15.07.2011 |
| **ஓகத்து** | .. | வெள்ளி | 05.08.2011 | .. | நண்பகல் 12 | வியாழன் | 22.07.2011 |
| | | வெள்ளி | 12.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 29.07.2011 |
| | | வெள்ளி | 19.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 05.08.2011 |
| | | வெள்ளி | 26.08.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 12.08.2011 |
| **செத்தெம்பர்** | .. | வெள்ளி | 02.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 19.08.2011 |
| | | வெள்ளி | 09.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 26.08.2011 |
| | | வெள்ளி | 16.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 02.09.2011 |
| | | வெள்ளி | 23.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 09.09.2011 |
| | | வெள்ளி | 30.09.2011 | .. | நண்பகல் 12 | வெள்ளி | 16.09.2011 |

**லக்ஷ்மன் குணவர்தன,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு 8,
2011 ஆம் ஆண்டு சனவரி மாதம் 01 ஆந் திகதி.